## 13.12 1993–94ம் ஆண்டு முதல் 1996–97 வரை ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய பங்குத் தொகையினை பகிர்ந்தளித்தல்

சுற்றுப்புறம் (ம) வனத் (வனம் 6) துறை

அரசாணை (நிலை) எண் 33 நாள் : 15.2.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 592, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 16.8.89
2. அரசாணை (நிலை) எண் 137, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 2.5.97
3. தலைமை வனப் பாதுகாவலர் (சமூக காடுகள்) கடிதம் எண் 20393/94/க2, நாள் 15.5.97
4. அரசாணை (நிலை) எண் 74, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 21.3.98
5. அரசாணை (நிலை) எண் 1, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 5.1.99
6. தலைமை வனப் பாதுகாவலர் (சமூக காடுகள்) கடிதம் எண் 20393/93/க2, நாள் 22.3.99
7. முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கடிதம் எண் டிஇ2/29103/99, நாள் 8.12.99

**ஆணை**

சுவீடன் பன்னாட்டு நிதியுதவியை பயன்படுத்தி சமூகக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1981 முதல் 1996 வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் ஊராட்சி, வருவாய்த் துறை, தரிசு, சமூக நிலங்களில் பெருமளவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களில் எரிபொருள், கால்நடை தீவணத் தேவைகளை நிறைவு செய்ய பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் வனங்களுக்கு ஏற்பட்ட அழிவு ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது.

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, சமூக வனத் தோட்டங்களின் ஏல விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயில் வனத்துறைக்கு 40 விழுக்காடு ஊராட்சிகளுக்கு 60 விழுக்காடும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அந்த தோட்டங்களில் பாதுகாப்பு பொதுமக்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படுவதால் அனைத்து சமூக வனப் பணிகளையும் ஊராட்சிகளிலும் படிப்படியாக பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்யப்பட வேண்டுமெனவும் கிராம சமூக வன ஊழியர்களின் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. சமூகக்காடுகள் / பண்ணைக் காடுகள் நிர்வாகம், சிறு வன மகசூல் சேகரிப்புகளில் உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு அதிகாரப் பொறுப்புரிமை ஒப்படைப்பு வழங்குவது பற்றிய மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருடன் கலந்து அரசால் விரிவாக ஆராயப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள ஆணையின்படி 60:40 என்ற வீதத்தில் வருவாய் பங்கீட்டினை உரிய முறையில் விரைவாக தொடர்ந்து வழங்கி வனத்துறையால் உருவாக்கப்பட்ட சமூக வனத் தோட்டங்கள் / பண்ணைக் காடுகள் அனைத்தும் சிறுவனப் பொருட்கள் சேகரித்தல் முதலான பணிகளும் அவற்றை பராமரிக்கும் பொறுப்பும் வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இருக்கும் என அரசு முடிவு செய்து பார்வை–5ல் படிக்கப்பட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. பார்வை–4ல் படிக்கப்பட்ட அரசாணையில் முதிர்ந்த சமூக வனத் தோட்டங்களின் விற்பனை மூலம் கிடைக்கும் மொத்த வருவாயிலிருந்து 4022 சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் கழித்து மீதமுள்ள தொகையிலிருந்து ஊராட்சிகள் / வனத் துறைக்கு முறையே 60:40 என்ற விகிதத்தில் 1.4.97 முதல் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. 1993–94 –ம் ஆண்டிலிருந்து 1995–96–ம் ஆண்டு வரை சமூக வன தோட்டங்களில் பொது ஏலம் மூலம் விற்பனை செய்ததில் கிடைத்த மொத்த வருவாயில் மேற்கண்ட அரசாணைகளின்படி 60% பங்குத் தொகையினை தொடர்புடைய ஊராட்சிகளுக்கு வழங்குவதற்காக மொத்த பங்குத் தொகை ரூ.21.00 கோடியில் ரூ.2.10 கோடி ரூபாய்க்கு மட்டும் நிதித் துறையால் செலவுரிமம் (letter of credit) வழங்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள ரூ.18.90 கோடி தொகைக்கு செலவுரிமம் வழங்கக் கோரி தலைமை வனப் பாதுகாவலர் (சமூகக் காடுகள்) மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளனர்.

5. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் செயற்குறிப்பு நிதித்துறையுடன் கலந்து அரசால் ஆராயப்பட்டு 1993–94 முதல் 1996–97–ஆம் ஆண்டு வரை சமூக வனத் தோட்டங்களில் ஏல விற்பனை மூலம் கிடைத்த மொத்த வருவாயிலிருந்து கிராம சமூக வனத் தோட்ட ஊழியர்கள் / காவலர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஏனைய செலவினங்களைக் கழித்தது போக மீதமுள்ள பங்குத் தொகை ரூ.8.75 கோடி (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டுமே) என கணக்கிடப்பட்டுள்ளது. அந்த தொகையினை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தொகை ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இந்த ஆணையின்படி ரூ.8.75 கோடி தொகையினை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு செலவுரிமம் (Letter of Credit) வழங்குமாறு நிதித் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கு 1999–2000–ஆம் ஆண்டு இறுதி திருத்திய மதிப்பீட்டில் (Final Modified Appropriation) செலவின விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு சேர வேண்டிய பங்குத் தொகையினை பகிர்ந்தளிக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித் துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அலுவல் சார்பற்ற எண்.3798/எப்.எஸ்/பி/99, நாள் 15.12.99)

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. இராஜரெத்தினம்**
அரசு செயலாளர்

## SIDA FORESTS – 60% DUE TO PANCHAYATS

| Sl.No. | Name of the District | 1996-97 | 1997-98 |
|---|---|---|---|
| 1 | Kancheepuram | 118213 | NIL |
| 2 | Tiruvallur | 47078 | 553157 |
| 3 | Cuddalore | NIL | NIL |
| 4 | Vilupuram | NIL | NIL |
| 5 | Vellore | NIL | NIL |
| 6 | Tiruvannamalai | NIL | NIL |
| 7 | Salem | NIL | 3096822 |
| 8 | Namakkal | NIL | 1493221 |
| 9 | Dharmapuri | NIL | NIL |
| 10 | Erode | NIL | NIL |
| 11 | Coimbatore | 78353 | 57112 |
| 12 | The Nilgiris | NIL | NIL |
| 13 | Thanjavur | 341637 | 268813 |
| 14 | Nagapattinam | NIL | NIL |
| 15 | Tiruvarur | NIL | NIL |
| 16 | Tiruchirapalli | Not received | |
| 17 | Karur | 529360 | 44183 |
| 18 | Perambalur | 2849200 | 766752 |
| 19 | Pudukottai | 2376382 | 1119188 |
| 20 | Madurai | 2014312 | 2818911 |
| 21 | Theni | 658347 | 131400 |
| 22 | Dindigul | NIL | 984417 |
| 23 | Ramanathapuram | 2213987 | 1423075 |
| 24 | Virudhunagar | Not received | |
| 25 | Sivagangai | 4245631 | 4565264 |
| 26 | Tirunelveli | 2100370 | 3029220 |
| 27 | Thuthukudi | 535478 | 149875 |
| 28 | Kanniyakumari | NIL | NIL |